Series : SOS/1

Code No. **6/1**

Roll No. | | | | | | | |

Candidates must write the code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **4** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **8** questions.
- **Please write down the serial number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the student will read the question paper only and will not write any answer on the answer script during this period.

# TAMIL
# தமிழ்

*Time allowed : 3 Hours*
கொடுக்கப்பட்ட நேரம் : 3 மணி

*Maximum Marks : 100*
அதிக மதிப்பெண்கள் : 100

## பகுதி-அ

1. (அ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் பிழைகளைத் திருத்தி எழுதுக. **5**

(i) பரவைகளின் அழகுகள் உறுதியானவை.

(ii) மாமறத்தில் ஏறியவன் கீழே இரங்கினான்.

(iii) காலை மாடுகள் உழவுப்பனிக்கு உதவுகின்றன.

(iv) மழை நிலத்தில் திணை பயிரிடப்படும்.

(v) கடல்கறையில் நின்று அழையை நெடுநேரம் கண்டேன்.

(vi) இறும்பு ஆயுதத்தைக் கொண்டு பாரையைப் பெயர்த்தனர்.

(vii) வேளையின் பழுவால் சோர்வடைந்தான்.

(ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லினமெய் இட்டு எழுதுக. **5**

(i) பரந்த உலகில் மாணவர்கள் அறிவை பெறுவதற்குப் பயன்படுவது இன்ப செலவாகும்.

(ii) நூலகத்திற்கு சென்று படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

(iii) உழைத்து கொண்டிருக்கும் மனிதன் மகிழ்ச்சியடைய விழாக்கள் கொண்டாட படுகின்றன.

(iv) பாரதியார் பாட்டு திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட வேண்டும் என்றார்.

(v) குடிசை தொழில் கிராம வளர்ச்சியை மையமாகக்கொண்டு செயல்படுவது மிக சிறந்தது.

(vi) சிற்றுயிர்கள் நமக்கு கற்று தரும் பாடம் முயற்சி என்பதாம்.

(vii) வேடந்தாங்கல் அயல் நாட்டு பறவைகள் தங்கி செல்லும் சரணாலயமாகும்.

(இ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களைக் கூறியவாறு செய்க. **5**

(i) வேலன் வேலையை நன்றாகச் செய்தான் (பிறவினையாக்குக)

(ii) "மாணவர்களே! நீங்கள் படிப்பிலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்க வேண்டும்" என்று ஆசிரியர் அறிவுரை கூறினார். (அயற்கூற்றாக்குக)

(iii) நற்செயல்களை அனைவரும் போற்றுவர் (பொருள் மாறாமல் எதிர்மறையாக்குக)

(iv) மழைநீரை மக்கள் சேமித்தனர் (செயப்பாட்டு வினையாக்குக)

(v) மாறன் கடுமையாக உழைத்தான்; அதனால் வாழ்க்கையில் உயர்ந்தான் (கலவை வாக்கியமாக்குக)

(vi) தந்தை மகனிடம் அவன் நேர்மையாக உழைக்க வேண்டுமென்று கூறினார் (நேர்க் கூற்றாக்குக)

(vii) கவலையடைந்த தாய் உன்னால் தேற்றப் பட்டாள் (செய்வினையாக்குக)

(ஈ) கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** குறித்துக் கடிதம் எழுதுக. **10**

நடைபாதைக் கடைகளை நீக்க வேண்டி நகராட்சித் தலைவர்க்கு ஒரு கடிதம் வரைக

**அல்லது**

விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக (எக்கடிதமாயினும் உமது முகவரி ஆ.சங்கரி/சங்கர், 10, தேரடித்தெரு, சென்னை 600 010 எனக் கொள்க)

## பகுதி-ஆ

2. கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக. **10**

பிறரைப் பற்றிக் கவலைப் படாமல் தன்னுடைய இன்பம் தன்னுடைய வாழ்க்கை வசதிகள் ஆகியவை பற்றி மட்டுமே எண்ணிச் செயல்படுதலே தன்னலமாகும். தன்னல மனப்பான்மை அதிகமாகும் போது பிறருக்குத் தீங்கு செய்தாவது தான் வளம் பெற வேண்டும் என்ற வஞ்சனை எண்ணம் உண்டாகின்றது. பொய் சொல்லுதல், திருடுதல் போன்ற எல்லாக் குற்றங்களுக்கும் தன்னலமே

அடிப்படையாக அமைவதையும் காண முடிகிறது. இவ்வாறு சமுதாயக் கொடுமைகளுக்கெல்லாம் தன்னலமே காரணமாக அமைவதையும் உலகியல் நிகழ்ச்சிகள் காட்டுகின்றன. தன்னைப் போலவே பிறரும் நன்றாக வாழ வேண்டும் என்ற இனிய பண்பின் அடிப்படையாகத் தோன்றுவது பொது நலமாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, தேவைக்கு மேல் வைத்துக் கொள்ளாமை போன்றவையும் பொதுநல மனப்பான்மையின் நல்விளைவுகளே ஆகும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செயலாற்றினால் பகைமை உணர்ச்சி நீங்குமன்றோ! தேவைக்குமேல் உள்ளதை மறைத்து வைக்காமல் பிறருக்குக் கொடுத்தால் அறஉள்ளம் வளருமன்றோ! இங்ஙனம் பொது நலம் பல நல்ல பண்புகளுக்கு அடிப்படையாதலை அறிய முடிகின்றது.

வினாக்கள்:

(i) தன்னலம் எனப்படுவது யாது ? **(2)**

(ii) தன்னலத்தினால் உண்டாகும் வஞ்சனை எண்ணங்கள் யாவை ? **(2)**

(iii) பொது நலம் தோன்ற அடிப்படையான இனிய பண்புகள் யாவை ? **(2)**

(iv) பகைமை உணர்ச்சி நீங்கி அறஉள்ளம் வளரச் செய்ய வேண்டுவன யாவை ? **(3)**

(v) தக்கதொரு தலைப்பினைத் தருக. **(1)**

**அல்லது**

சாலை போக்குவரவு விதிகளைக் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டி எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து சாலை போக்குவரத்துத்துறை ஆணையரை நேர் காணல் செய்க.

## பகுதி - இ

3. கீழ்வரும் தலைப்புகளுள் ஏதேனும் **ஒன்று** குறித்து மூன்று பக்க அளவில் கட்டுரை வரைக. **15**

(i) உலகம் வெப்பமயமாதல்

(ii) உழவுத் தொழிலின் மேன்மை

(iii) தொழிற்கல்வி

## இலக்கியம்

## பகுதி - அ

4. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக. **10 × 2 = 20**

(i) முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

(ii) நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு.வி.க. வாதிடுவதனை விளக்குக.

(iii) நம் தமிழ் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(iv) கவிதையின் இயல்பாக மேனாட்டறிஞர்கள் கூறும் கருத்துகளையும் அவற்றிற்குப் பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை உரைக்கும் மறுப்புகளையும் கட்டுரை வடிவில் வரைக.

## பகுதி - ஆ

5. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. **5 × 2 = 10**

(i) இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.

(ii) தலைவன் வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியதை விளக்குக.

(iii) அறிவுடைமை அதிகாரத்தில் அமைந்துள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

(iv) கண்ணகியின் சூளுரையும் ஊர்மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை?

6. கீழ்வரும் செய்யுட் பகுதியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக. **5**

"கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்"

(i) இவ்வடி இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார் ? **(2)**

(ii) கற்பினுக்கணி யார்? அணியைக் கண்ட கண்கள் யாருடையவை ? **(2)**

(iii) யாரிடம் இக்கூற்று கூறப்பட்டது ? **(1)**

**அல்லது**

'நெடுந்தேர் ஊர்மதி வலவ'

(i) இவ்வடி இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார் ? **(2)**

(ii) யாருடைய கூற்று? யாரிடம் கூறப்பட்டது ? **(2)**

(iii) 'வலவ' - பொருள் தருக. **(1)**

## பகுதி - இ

7. 'சட்டை' - இக்கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. **10**

**அல்லது**

'மகன்' - இக்கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

8. கோமதியின் பாத்திரப் படைப்பை விவரிக்க. **5**

**அல்லது**

மூக்கப்பிள்ளையின் பாத்திரப் படைப்பை விவரிக்க.

---